மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இந்த மாவட்டத்தில் திராட்சைப் பயிர் செய்தால் மிக நல்லது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. எல்லா மாவட்டங்களிலும் திராட்சைப் பயிரிட நன்ருக இருக்கும் காரணத்தால் நல்ல மகசூல் கிடைக்கிறது. ஊக்கப்படுத்துவதற்கு திட்டம் ஒன்றும் இல்லையென்று சொன்னேன்.

திரு. கோ. இளங்கோவன் : திராட்சைப் பயிரிட ஆகின்ற செலவு ஏக்கருக்கு மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் ; மாவட்டத்திற்கு மாவட்டம் செலவு வேறுபடுகிறது என்ற காரணத்தால்தான் அந்தந்த மாவட்டத்திலுள்ள கூட்டுறவு வங்கிகள் அவர்கள் கொடுக்கின்ற கடன் தொகையை வேறு வேறு விதமாக நிர்ணயித்திருக்கிறுர்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியாகக் கூட்டுறவு வங்கியில் டெக்னிகல் செல் இருக்கிறது. அவர்கள்தான் திராட்சைப் பயிருக்கு எவ்வளவு கடன் கொடுக்கலாம் என்று தீர்மானிக்கிறுர்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு கொடுப்பது என்று முடிவு செய்திருக்கிறுர்கள்.

பாதிரிவேடு விவசாய கிடங்குக் கட்டடம்

*731 வினு— திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், பாதிரிவேடு கிராமத்தில் உள்ள விவசாயத் துணைக் கிடங்கிற்குக் கட்டடம் கட்டித் தருவதில் ஏற்படும் காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

(இ) இது எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) & (இ) பாதிரிவேடு கிராமத்தில் உள்ள விவசாயக் கிடங்கிற்கு கட்டிடம் கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : பாதிரிவேடு வட்டாரத்திலுள்ள விவசாயிகள் 15 மைல் தூரம் சென்று ஒன்றியத்தின் தலைநகரத்தில் தங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்தக் கிடங்கினை விரிவான அளவில் விரைவாகக் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

1975 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: விவசாயக் கிடங்கு கட்டுவது என்ருல் குறைந்த பட்சம் அதிலே வருஷத்திற்கு 50,000 ரூபாய் அளவுக்கு வரவு-செலவு ஆகவேண்டும் என்ற அளவுகோல் இருக்கிறது. அதனுல்தான் இடையில் தடைப்பட்டு 28-2-1975 அன்று மீண்டும் தொடங்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Cultivation of Jute

*732 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether any study has been conducted on the cultivation of jute in non-paddy areas of Thanjavur district?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: இல்லை.

திரு. என். கே. பழனிசாமி: தஞ்சையில் பைலட் ஸ்கீமாக சணல் விளைவிப்பது பரிசீலிக்கப்பட்டதா? அதிலே என்ன முடிவு ஆயிற்று? அது சக்ஸஸ்புல்லா இல்லையா? இது மற்ற ஜில்லாக் களுக்கும் விஸ்தரிக்கக்கூடிய முறையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: வினு "நான்-பாடி ஏரியாவில் இது பரிசீலிக்கப்பட்டதா?" என்பதாகும். நஞ்சை நிலங்களில் சில பகுதிகளில் இரண்டொரு இடங்களில் 1971, 1972, 1973 ஆகிய வருஷங்களில் பரீட்சித்துப் பார்த்ததில் ஜூட் பயிர் செய்வதை விவசாயிகள் விரும்பவில்லை என்று முடிவு செய்து அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் பகுதியில் சணல் பயிரிடப்படுகிறது. அந்த விவசாயிகளை ஊக்குவிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: வினு ஜூட் பற்றியது. அவர்கள் 'ஹெம்ப்' பற்றிக் கேள்வி கேட்கிருர்கள். ஹெம்ப் வேறு. ஜூட் வேறு. தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், நாகப்பட்டினம், மன்னுர்குடி, மாயூரம் ஆகிய பகுதிகளில் 10 சென்ட் அளவில் ஜூட் பயிர் செய்து பார்க்கப்பட்டது.

நகராட்சி உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள்

*733 வினு—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு உள்ளாட் சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா?